# யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019

| தரம் : 06 | கர்நாடக சங்கீதம்<br>சுட்டெண் : ........................................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. குழந்தைப் பருவத்தில் பாடப்படும் நாட்டார் பாடல் வகை
    1) நலங்குப் பாடல்
    2) மருத்துவிச்சி வாழ்த்துப் பாடல்
    3) ஊஞ்சற் பாடல்
    4) நாற்று நடுகைப் பாடல்

02. **"மகர சங்கிராந்தி "** என சிறப்பித்துக் கூறப்படும் பண்டிகை
    1) தீபாவளி
    2) வருடப்பிறப்பு
    3) தைப்பொங்கல்
    4) ஆடிப்பிறப்பு

03. பின்வருவனவற்றுள் நீண்ட தூரம் கேட்கும் ஒலி
    1) கதைக்கும் ஒலி
    2) கோயில் மணியொலி
    3) புல்லாங்குழலிசை
    4) கை தட்டும் ஒலி

04. **"தோடுடைய செவியன்'** என்பது ஒரு
    1) சிறுவர் பாடல்
    2) தேவாரம்
    3) நாட்டார் பாடல்
    4) கீதம்

05. பாடசாலையின் வரலாறு, பெருமைகள், சிறப்புக்களை வெளிப்படுத்தும் பாடல் வகை
    1) பாடசாலைக் கீதம்
    2) நாட்டார் பாடல்
    3) தேசிய கீதம்
    4) சிறுவர் பாடல்

06. சங்கீதத்தில் **"ஸ்ருதியை"** ஒப்பிடுவது
    1) பிதா
    2) குரு
    3) சீடன்
    4) மாதா

07. ஸரிகம என்ற ஸ்வரக் குறியீடு விளக்குவது
    1) அவரோகணம்
    2) ஸ்ருதி
    3) ஆரோகணம்
    4) அமரோசை

08. **"கண்ணன் புரிந்த லீலை"** என்ற பாடல் ஒரு
    1) நாட்டார் பாடல்
    2) சிறுவர் பாடல்
    3) பக்திப் பாடல்
    4) தேவாரம்

09. தோடுடைய செவியன் எனப் போற்றப்படுபவர்
    1) சிவபெருமான்
    2) முருகன்
    3) விநாயகர்
    4) கிருஷ்ணர்

10. அநாகத நாதத்தை உணர்ந்த யோகி
    1) ஞானசம்பந்தர்
    2) N. வீரமணி ஐயர்
    3) பொன். ஸ்ரீ வாமதேவன்
    4) தியாகராஜ ஸ்வாமிகள்



kalvi.lk

11. தாலாட்டுப் பாடலில் ஆரம்பத்தில் பாடப்படும் வரி

1) ஏலேலோ
2) ஆராரோ
3) தந்தனத்தானா
4) தெய்தெய்யா

12. பின்வருவனவற்றுள் **"இரைச்சல்"** என இனங்காணப்படும் ஒலி

1) புல்லாங்குழல் இசை
2) மணியோசை
3) வாகனம் புறப்படும் ஒலி
4) பக்திப் பாடல்

13. ஸ்வரங்கள் ஸ்ருதியில் குறைவடைவதைக் குறிப்பது

1) அவரோகணம்
2) ஆரோகணம்
3) ஆகுத நாதம்
4) அநாகத நாதம்

14. கைவிசேடம் வழங்கல், மருத்துநீர் வைத்தலுடன் தொடர்புடைய பண்டிகை

1) வருடப்பிறப்பு
2) தைப்பொங்கல்
3) ஆடிப்பிறப்பு
4) தீபாவளி

15. ஒலிக்கும் பாடலைக் கேட்டவுடன் எழுந்து நின்று மதிப்புக் கொடுத்து அமைதி காக்கும்படியான பாடல் வகை **அல்லாதது**

1) பாடசாலைக் கீதம்
2) தேசிய கீதம்
3) தேவாரம்
4) சிறுவர் பாடல்

16. நுண் கலைகளுள் சிறந்த கலை

1) நடனம்
2) சங்கீதம்
3) நாடகம்
4) ஓவியம்

17. ஆரோகணத்தின் மறுபெயராய் அமைவது

1) ஆரோசை
2) அமர்முடுகல்
3) இறக்கம்
4) அமரோசை

18. இசை உருவாவதற்கு அடிப்படையாய் அமைபவை

1) ஏழு தாளங்கள்
2) பாடல்கள்
3) பஜனைகள்
4) ஏழு ஸ்வரங்கள்

19. நாம் பாடும் சங்கீதம், வாத்தியங்களில் வாசிக்கும் சங்கீதம் என்பவை உள்ளடங்கும் நாதம்

1) சங்கு நாதம்
2) அநாகத நாதம்
3) ஆகத நாதம்
4) ஓங்கார நாதம்

20. கம்பீர நாட்டை எனும் இராகத்திற்குரிய பண்

1) நட்டபாடை
2) பூபாளம்
3) செந்துருத்தி
4) கௌசிகம்

( 20 × 1 = 20 புள்ளிகள்)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

## பகுதி - II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01.** 1) நீர் தவணை இரண்டில் மேற்கொண்ட சங்கீத பாட கணிப்பீட்டு வகை யாது?

2) இக்கணிப்பீட்டை நிறைவேற்ற உள்ளடக்கப்பட்ட அலகுகள் எவை?

3) இக்கணிப்பீட்டை நிறைவேற்ற நீர் எதிர்கொண்ட பிரச்சினைகள் எவை?.

4) இக்கணிப்பீட்டை நிறைவேற்றியமையால் உமக்குக் கிடைத்த நன்மைகள் எவை?

(2 + 2 + 3 + 3 = 10 புள்ளிகள்)

**02.** 1) நீர் தரம் ஆறில் கற்ற சிறுவர் பாடலின்
இராகம் யாது?
தாளம் யாது?
இயற்றியவர் யார்?

2) அச் சிறுவர் பாடலை உறுப்பமைய முழுமையாக எழுதுக.

( 3 + 7 = 10 புள்ளிகள்)

**03.** **அ)** 1) ஸ்வரம் என்றால் என்ன?

2) ஸ்வரமானது தமிழிசையில் எதற்கு ஒப்பிடப்படுகிறது?

3) ஸ்வரங்களின் வடமொழிப் பெயர்களையும் அவற்றின் தமிழ்ப் பெயர்களையும் அட்டவணைப்படுத்துக.

( 2 + 1 + 7 = 10 புள்ளிகள்)

**அல்லது**

**ஆ)** 1) வெசாக் பண்டிகை பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

2) றம்ழான் பண்டிகை பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

( 5 + 5 = 10 புள்ளிகள்)


kalvi.lk

kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page